# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 25 செவ்வாய்க்கிழமை 08.07.2025 கதிர் 248








# காணி அபகரிப்புகள் இந்த அரசு மீதான மக்களின் நம்பிக்கையைச் சிதைக்கும்

## சபையில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. எடுத்துரைப்பு



கொழும்பு, ஜூலை 08

“வடக்கு மற்றும் கிழக்கில் காணிகள் விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டாலும் முப்படையினர் பல்வேறு வழிகளில் காணி அபகரிப்பு செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். அரசு ஓர் கொள்கையில் இருக்கையில் வடக்கு மற்றும் கிழக்கில் முப்படையினரும், பொலிஸாரும் பிறிதொரு கொள்கையில் செயற்படுகின்றார்கள். மாறுபட்ட கொள்கைகளால் அரசின் மீதான மக்களின் நம்பிக்கை சிதைவடையும்.” - என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் 7➤

# சர்வதேச விசாரணைகளுக்கு செம்மணிப் புதைகுழி ஆதாரம்

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 08

“ஈழத்தமிழர்கள் மீதான இனப்படுகொலைகளுக்கோ, போர்க்குற்றங்களுக்கோ முள்ளிவாய்க்காலை மட்டும் சாட்சியமாகக் கொள்ள முடியாது. ஆனால், இலங்கை சுதந்திரமடைந்ததாகச் சொல்லப்படும் 1948களிலிருந்து இன்று வரை ஈழத்தமிழர்கள் மீது பௌத்த மேலாதிக்கவாதிகளால் புரியப்பட்ட மிக மோசமான படுகொலைகளுக்கான பிரதான சாட்சியமாக முள்ளிவாய்க்காலைப் போன்று, செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியை அடையாளப்படுத்தப்படுத்த முடியும்.” - என்று நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளில் நேற்று வரை 52 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அகழப்படும் பகுதிகளில் இருந்து மழைநீரை வெளியேற்றுவதற்காக அமைக்கப்பட்ட கால்வாய்களில் கூட மூன்று இடங்களில் என்புச் சிதிலங்கள் தென்பட்டுள்ளன என்றால் இனப்படுகொலைக்கான வலுவான சாட்சியமாக அந்த மனிதப் புதைகுழியை 7➤

## எவ்வளவு கடினமானதாக இருந்தாலும்

# ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு நீதி நிலைநாட்டப்படும்



## ஜனாதிபதி அநுர உறுதி

கொழும்பு, ஜூலை 08

“கால ஓட்டத்தில் மூடிமறைக்க இடமளிக்காது உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க தேவையான அனைத்து முயற்சிகளையும் நான் முன்னெடுப்பேன். ஆனால், அது இலகுவான விடயமல்ல என்பதையும் நான் அறிவேன்.


அரச அதிகாரிகளிடம் அரசே விசாரணையை முன்னெடுக்கும் பலவீனமான நிலை உருவாகியுள்ளது. இது எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் இந்த விடயத்தில் நீதி, நியாயம் நிலைநாட்டப்படும்.” - என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் குருத்துவப் பணிவாழ்வின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை கொழும்பு பேராயர் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கௌரவிப்பு விழாவில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி,

“பின்தங்கியுள்ள சமூகத்தில் மீண்டும் மனிதாபிமானத்தின் உயிரோட்டத்தையும் ஆன்மீகப் பண்புகளையும் கொண்டு வருவதில் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் வகிபாகம் முன்மாதிரியானது. சமூகத்தின் நல்வாழ்வு மற்றும் ஆன்மீகத்தை கட்டியெழுப்புவதற்காக பெரும் பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ள அன்னார், பாரிய சேவையாற்றும் ஒரு ராஜதந்திரி. பைபிளை மிக 7➤

# கைத்துப்பாக்கி, ஹெரோயினுடன் நீர்கொழும்பில் ஒருவர் சிக்கினார்



நீர்கொழும்பு, ஜூலை 08

கைத்துப்பாக்கி, தோட்டாக்கள் மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு, 20 ஆவது 7➤

# தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிரான போராட்டத்துக்கு முன்னணியினர் அழைப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 08

தையிட்டி பகுதியில் தனியார் காணிகளை ஆக்கிரமித்து இலங்கை இராணுவத்தால் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரைக் கட்டடத்துக்கு எதிராக நாளையும், நாளைமறுதினமும் முன்னெடுக்கப்படும் போராட்டத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது. 7➤



# ரயிலில் மோதி இளைஞர் பலி!

## மட்டக்களப்பில் துயரம்

மட்டக்களப்பு, ஜூலை 08

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கறுவப்பங்கேணியில் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை ரயிலில் மோதுண்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 7➤

# ரம்புட்டான் விதை தொண்டையில் சிக்கி 5 வயது சிறுவன் சாவு!

கொழும்பு, ஜூலை 08

ரம்புட்டான் விதை தொண டையில் சிக்கி ஐந்து வயது சிறுவன்ஒருவன்பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

இந்தச் சம்பவம் அம்பாந தோட்டை - 7➤



# ஓமந்தையில் அரச காணிக்குள் அத்துமீறி விகாரை கட்டுவதற்குப் பொலிஸார் முயற்சி

## மக்களின் போராட்டத்தால் தடுத்து நிறுத்தம்

ஓமந்தை, ஜூலை 08

வவுனியா, ஓமந்தை பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் உள்ள அரச காணிக்குள் ஓமந்தைப் பொலிஸார் அத்துமீறிச் சென்று துப்புரவு செய்து அதில் விகாரை அமைக்க மேற்கொண்ட முயற்சி இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அந்தப் பகுதியில் கூடியவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

ஓமந்தையின் ஏ - 9 வீதியில் பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் தனியார் உரிமை கோரி வரும் அரச காணி ஒன்றைப் பொலிஸார் துப்புரவு 7➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# வெளிநாட்டவரிடம் அத்துமீறிய நபர்கள்– ஒருவர் கைது!



கொழும்பு, ஜூலை 08

திருகோணமலை அலஸ்தோட்டம் பகுதியில் உள்ள ஒரு சுற்றுலா விடுதியில் நடைபெற்ற விருந்தில் வெளிநாட்டவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், தலைமறைவாகியுள்ள சந்தேகநபரை கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

திருகோணமலை அலஸ்தோட்டம் பகுதியில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் நடைபெற்ற விருந்தில் வெளிநாட்டு பெண் ஒருவரை உள்நாட்டவர் ஒருவர் விரும்பத்தகாத முறையில் தொட முயன்ற வேளையில், குறித்த நபரை வெளிநாட்டுப் பெண்ணின் கணவர் எச்சரித்துள்ளார்.

இதன்போது குறித்த வெளிநாட்டவரை சந்தேகநபர்கள் இருவர் கடுமையாக தாக்கியுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் உப்புவெளி காவல்துறையினருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டது.

அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் ஒருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு பின்னர் ஜூலை 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலும் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றைய சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளதுடன், அவரை கைது செய்வதற்கான நடவடிக்கையினை உப்புவெளி பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தாதியர்களின் ஓய்வு வயது குறித்து வெளியான சுற்றறிக்கை!

கொழும்பு, ஜூலை 08

தாதியர்களின் கட்டாய ஓய்வு வயதை 60 ஆகக் குறைப்பதால், தற்போதுள்ள தாதியர் பற்றாக்குறை மேலும் மோசமடையும் என்று அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர் வணக்கத்திற்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

தாதியர் அதிகாரிகளின் கட்டாய ஓய்வு வயதை 63 ஆக நீட்டித்த மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து சுகாதார அமைச்சு உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது.

அதன்படி, குறித்த வழக்கு முடியும் வரை மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை நிறுத்தி வைக்க உயர் நீதிமன்றம் மார்ச் 6ஆம் திகதி உத்தரவிட்டது.

அந்த உத்தரவின்படி, 60 வயதை நிறைவு செய்த அனைத்து தாதியர் அதிகாரிகளும் ஓய்வு பெற வேண்டும் என்று சுகாதார அமைச்சின் செயலாளரால் கடந்த 4ஆம் திகதி சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் விடுதலைப் புலிகள் பயங்கரவாதம் தீவிரமாக இருந்ததை விட மோசமான நிலையை எட்டியுள்ளது

கொழும்பு, ஜூலை 08

நாட்டில் விடுதலைப் புலிகள் பயங்கரவாதம் தீவிரமாக இருந்ததை விட மோசமான நிலையை எட்டியுள்ளது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் விடுதலைப் புலிகள் பயங்கரவாதம் தீவிரமாக இருந்ததை விட மோசமான நிலையை எட்டியுள்ளது. 1988-1989 காலகட்டத்தில் ஜே.வி.பி.யின் பயங்கரவாத நிலையை நோக்கி நகர்ந்து வருவது இப்போது தெளிவாகத் தெரிகிறது.

நீதிமன்றத்தில் மக்கள் சுட்டுக் கொல்லப்படுவதைக் காண்கிறோம். பொலிஸாரின் முன்னிலையில் மக்கள் கொல்லப்படுவதைக் காண்கிறோம். வீடுகளில் மக்கள் கொல்லப்படுகிறார்கள்.

கொலைகளை மிகவும் பொதுவான விஷயமாக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. கொல்லப்படுபவர்கள் போதைப்பொருட்களில் ஈடுபட்டவர்கள் அல்லது பாதாள உலகில் ஈடுபட்டவர்கள் என்று கூறி அரசாங்கம் மிக எளிதாக அதிலிருந்து தப்பிக்க முயற்சிக்கிறது.

கொள்கலன் சம்பவத்தில் நடந்த மோசடியை முதன் முதலில் அம்பலப்படுத்திய டான் பிரியசாத் தனது சொந்த வீட்டிலேயே வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். அந்தக் கொலைகள் அனைத்தும் மிகவும் எளிமையான முறையில் மறைக்கப்படுகின்றன.

இந்தக் கொலைகளுக்குப் பின்னால் இந்த அரசாங்கம் உள்ளது. ஒரு பாசிச ஆட்சியை உருவாக்கும் நோக்கத்திற்கான முக்கிய அடிப்படை நிபந்தனை இதுதானா என்பதில் எங்களுக்கு பெரும் சந்தேகம் உள்ளது.

பாசிச ஆட்சியால் அதன் எதிரிகளை அடக்க முடியாதபோது, அடையாளம் தெரியாத துப்பாக்கி ஏந்தியவர்கள் மூலம் அவர்கள் கொலைச் செய்யப்படுகின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# சம்பூர் படுகொலையின் 35ஆவது ஆண்டு நினைவேந்தல்





மூதூர், ஜூலை 08

மூதூர் கிழக்கு - சம்பூர் படுகொலையின் 35 ஆவது ஆண்டு நினைவேந்தல் திங்கட்கிழமை அன்று மாலை சம்பூரில் அமைந்துள்ள நினைவுத்தூபி வளாகத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பொது மக்களால் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மூதூர்கிழக்கு - சம்பூரில் 1990ஆம் ஆண்டு ஜூலைமாதம் 7ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட 57 பேர் உட்பட அதனை அண்மித்த காலப்பகுதியில் அப்பகுதியில் படுகொலை செய்யப்பட்டு உயிர்நீத்த நூற்றுக்கும் அதிகமான பொது மக்களுக்குமானஅஞ்சலி நிகழ்வும் இதன் போது நடைபெற்றது.

படுகொலைசெய்யப்பட்டு உயிர்நீத்த உறவுகளுக்குமலர் தூவி, விளக்கேற்றி அஞ்சலிசெலுத்தப்பட்டது இந்த நிகழ்வில் பாதிக்கப்பட்டகுடும்பங்கள் மனித உரிமை செயற்பாட்டாளர்கள்,பெண் உரிமை பாதுகாவலர்கள், சிவில்அமைப்புகள், பிரதேச அரசியல்வாதிகள் உட்படபலரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

இந்த கொடூரமான படுகொலை சம்பவத்தின் போது சீருடை அணிந்த, ஆயுதம் தாங்கிய படைகள்,பிற்பகல் 2 மணியளவில் சம்பூரில் அமைந்த குடியிருப்புகளை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதன் போது மக்கள் தங்கள் பிள்ளைகள், குடும்ப உறுப்பினர்களுடன் சாக்கரவட்டவன் காட்டுப் பகுதிகளுக்குச் சென்று, பாதுகாப்பாக தஞ்சம் அடைந்தனர்.

பின்னர்,அவர்களை ஊருக்குள் வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டதும்,பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் ஆலயங்களில் தஞ்சம் புகுந்தனர். ஆனால்,காட்டுக்குள் பதுங்கியிருந்த ஆண்களை பாதுகாப்புப் படைகள்வெட்டியும், சுட்டும், எரித்தும் படுகொலை செய்தனர்.

எனவும் இந்தக் கூட்டுப் படுகொலையின் 35 ஆண்டுகள் கடந்தும், மூதூர் கிழக்கு - சம்பூர் மக்களுக்கு இன்னும் நீதி வழங்கப்படவில்லை என்றும் பாதிக்கப்பட்டவர்கள் கவலையுடன் கண்ணீர் வடித்தனர்.

யுத்தம் முடிந்து 15 ஆண்டுகளாகின்ற நிலையிலும், நாட்டின் எந்தவொரு அரசும் இதுவரை உரியநீதிச் செயல்முறைகளை மேற்கொள்ளவில்லை. இந்நாளில், தற்போதைய அரசு, மூதூர் கிழக்கு சம்பூர் பகுதியில் இடம்பெற்ற படுகொலைகளுக்கான நீதியை உறுதி செய்யும் நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் எனவும் அஞ்சலி நிகழ்வில் பங்கேற்றவர்கள் வலியுறுத்தினர்.

கடந்த யுத்த காலத்தில் மூதூர் கிழக்கு - சம்பூர்கிராமத்தில் இடம் பெற்ற படுகொலைச் சம்பவத்தில் பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள்,பெண்கள் உட்பட நூற்றுக்கும் அதிகமானவர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். (ஐ)

## பெருந்தொகையான பூச்சிக்கொல்லிகள் மீட்பு



கொழும்பு, ஜூலை 08

புத்தளம், கற்பிட்டி இப்பந்தீவு மற்றும் ஆலங்குடா ஆகிய கடற்பிரதேசத்தில் இருந்து சட்டவிரோதமாகநாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு தொகைபூச்சிக்கொல்லிகள் மற்றும் விதைகள் என்பன கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வடமேற்கு கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் விஜய நிறுவன படையினர் ஆலங்குடா கடற்பிரதேசத்தில் நடத்திய சிறப்புசோதனையின்போது, அங்குசந்தேகத்திற்கிடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றை கடற்படையினர் பரிசோதனை செய்தனர்.

இதன்போது, 32 உர மூடைகளில்அடைக்கப்பட்ட நிலை யில் காணப்பட்ட பெருந்தொகையான பூச்சிக்கொல்லிகள் மற்றும் விதைகள் என்பவற்றுடன் குறித்த லொறியையும் கடற்படையினர் கைப் பற்றியுள்ளனர்.

இதேவேளை, கற்பிட்டி, இப்பந்திவுகடற்பிரதேசத்தில் கடற்படையினர் நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, அங்குசந்தேகத்திற்கிடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்ட இரண்டுடிங்கி படகுகளை கடற்படையினர் பரிசோதனைசெய்துள்ளனர்.

இதன்போது, குறித்த டிங்கி இயந்திரப்படகுகளில் புச்சிக்கொல்லி தூள் வகைகள்இருந்துள்ளதுடன், அதனை கைப்பற்றிய கடற்படையினர் இரண்டு டிங்கிஇயந்திரபடகுகளையும் தமது பொறுப்பில் எடுத்தனர்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கு விநியோகிக்கும் நோக்கில் சட்டவிரோதமாகநாட்டுக்குள் கடத்திவரப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் குறித்த பூச்சிக் கொல்லிகள், விதைகள் மற்றும் லொறி, இரண்டு டிங்கி படகுகள் என்பனவற்றை கடற்படையினரின் கெடுபிடிகள் காரணமாக கடத்தல்காரர்கள்கைவிட்டுச் சென்றிருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இவ்வாறுகைப்பற்றப்பட்ட பூச்சிக்கொல்லிகள், விதைகள் மற்றும் டிங்கி இயந்திரப் படகுகள், லொறி என்பன மேலதிக நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்கத் தடுப்பு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

## புத்தளத்தில் 'டச்சுப் பாலம்' திறந்துவைப்பு



புத்தளம், ஜூலை 08

புத்தளம் மாவட்டத்தின் மதுரங்குளி- தொடுவா பிரதான வீதியின் கடையாமோட்டை (டச்சுப் பாலம்) பகுதியில் உள்ள புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலம் அரசியல் பிரமுகர்களால் மக்கள் பாவனைக்காக திங்கட்கிழமை (07) அன்று உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

மதுரங்குளி பிரதேசத்தில் மிக நீண்ட கால வரலாற்றைக் கொண்ட மிகவும் பழமை வாய்ந்த குறித்த பாலம் நீண்ட காலமாக உடைந்து பழுதடைந்து காணப்பட்டமையினால் இந்த பாலத்தின் ஊடாக நாளாந்தம் போக்குவரத்து மேற்கொள்ளும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும், நூற்றுக்கணக்கான வாகன சாரதிகளும் பெரிதும் சிரமத்திற்கு முகம் கொடுத்து வந்தனர்.

இந்த நிலையில், குறித்த பாலத்தின் நிர்மாணப்பணிகள் முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அவை புனரமைக்கப்படாமல் இடை நிறுத்தப்பட்டிருந்தது.

எனினும், இந்த வருடம் மார்ச் மாதம் முதல் பாலத்தின் புனரமைப்பு பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதுடன், 30 மீட்டர் நீளமும், 9.2 மீட்டர் அகலமும் கொண்ட இந்தப் பாலத்தின் நிர்மாணப் பணிகளுக்கான பொது நிர்வாக , மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஊடாக நெதர்லாந்து அரசாங்கம் 191 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்திருந்தது.

இந்தப் புதிய பாலத்தின் திறப்பு விழா நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கயன் ஜானக, முஹம்மது பைஸல், புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத், கற்பிட்டி பிரதேச சபைத் தலைவர் ஏ.எஸ்.எம். ரிகாஸ், பிரதித் தலைவர் சமன் குமார, மதுரங்குளி வர்த்தக சங்கத் தலைவர் எம்.எஸ்.ரி.அமான் , மதுரங்குளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் காமினி விக்ரமசிங்க உட்பட

புத்தளம், கற்பிட்டி ஆகிய பிரதேச சபைகளின் ஆளும் கட்சி உறுப்பினர்கள்,பொறியியலாளர்கள், பொதுமக்கள் என பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

நீண்ட காலமாக இந்தப் பிரதேசத்தில் காணப்பட்ட டச்சுப் பாலம் பழுதடைந்தமையினால், மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்ததாகவும்,எனினும் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் நான்கு மாதங்களில் அதற்கான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஹம்மது பைஸல் இதன்போது தெரிவித்தார்.

மக்களின் தேவைகளை உணர்ந்து குறுகிய



காலத்திற்குள் இந்தப் பாலத்தின் புனரமைப்பு பணிகளை நிறைவு செய்து கொடுப்பதற்கு உதவிய நெதர்லாந்து அரசு மற்றும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க உட்பட இதற்காக முயற்சி செய்த அரசியல் பிரமுகர்கள், அரசாங்கத்தின் அதிகாரிகள், பொறியியலாளர்கள், மதுரங்குளி வர்த்தக சங்கம் உள்ளிட்ட தனவந்தர்கள் அனைவருக்கும் பொதுமக்கள் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், முந்தைய அரசாங்கங்களைப் போல அன்றி, செலவுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் குறித்த பாலத்தின் திறப்பு விழா நிகழ்வை ஆடம்பரமின்றி,மிகவும்எளிமையாக நடத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், மீன்பிடி, தும்பு ஏற்றுமதி, விவசாயம் மற்றும் கைத்தொழில் என பல துறைகளில் இந்தப் பிரதேசம், இலங்கை அந்நிய செலாவணியை பெறுவதற்கு பெரும் பங்காற்றி வரும் நிலையில், இன்னும் பல அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கும் கற்பிட்டி சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம் எனவும் கூறினார்.

குறித்த பாலத்தின் நிர்மாணப்பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது, மக்களின் போக்குவரத்துக்காக மதுரங்குளி வர்த்தக சங்கம் உட்பட தனவந்தர்களின் நிதிப் பங்களிப்பு பாலத்திற்கு அருகில் தற்காலிக வீதி ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# திருச்சி விமான நிலையத்தில் 11.8 கிலோ உயர்ரக கஞ்சா பறிமுதல் இதன் மதிப்பு ரூ.11.8 கோடி!



பாங்காக்கில் இருந்து விமானத்தில் கடத்தி வரப்பட்ட, 11.8 கோடி ரூபாய் மதிப்புள்ள 11.8 கிலோ உயர் ரக கஞ்சா, திருச்சி விமான நிலையத்தில் பறிமுதல் செய்யப்பட்டது.


தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் இருந்து கோலாலம்பூர் வழியாக, விமானத்தில் நேற்று திருச்சி விமான நிலையம் வந்த பயணியரை, சுங்கத்துறை அதிகாரிகள் சோதனையிட்டனர்.

அப்போது, சந்தேகத்திற்கிடமாக நடந்து சென்ற பயணியை தனியே அழைத்துச்சென்று சோதனையிட்டனர்.

அந்நபர், 11.8 கிலோ ஹைட்ரோபோனிக் என்ற உயர்ரக கஞ்சாவை, சீல் செய்யப்பட்ட பைகளில் எடுத்து வந்தது தெரியவந்தது. கஞ்சாவை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்து, அந்நபரை கைது செய்தனர். மேலும் விசாரணை நடந்து வருகிறது.

அண்மைக் காலமாக திருச்சி விமான நிலையம் வழியாக ஹைட்ரோபோனிக் கஞ்சா கடத்தி வருவது அதிகரித்துள்ளது. பறிமுதல் செய்யப்பட்ட உயர்ரக கஞ்சாவின் மதிப்பு ரூ.11.8 கோடி என சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## பீஹாரில் அரசு வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு 35 % இட ஒதுக்கீடு முதல்வர் நிதிஷ் அறிவிப்பு



பாட்னா் பீஹாரில் அனைத்து துறை அரசு வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு 35 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்று அம்மாநில முதல்வர் நிதிஷ்குமார் அறிவித்துள்ளார்.

பெரும் எதிர்பார்ப்புகளுக்கு இடையே பீஹாரில் இந்தாண்டு இறுதிக்குள் சட்டசபை தேர்தல் நடக்க உள்ளது. ஒட்டுமொத்த நாடே காத்திருக்கும் இந்த தேர்தலுக்காக முக்கிய அரசியல் கட்சி தலைவர்கள் ஆயத்தமாகி வருகின்றனர்.

இந் நிலையில், அரசு வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு 35 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்று அம்மாநில முதல்வர் நிதிஷ்குமார் அறிவித்துள்ளார். பீஹார் அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டு உள்ளது.

இதுகுறித்து முதல்வர் நிதிஷ்குமார் கூறி உள்ளதாவது

இதற்காக பீஹார் இளைஞர் ஆணையத்தை அமைக்கலாம் என அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த அமைப்பானது மாநிலத்தில் உள்ள இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை அளித்தல், அவர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் அதிகாரம் பெற்ற, திறமையானவர்களாக மாற்ற ஆலோசனைகள் வழங்குவதே இந்த ஆணையத்தின் நோக்கம்.

மது, போதைப்பொருள் பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகளை தடுக்க திட்டங்கள் வகுப்பதும் ஆணையத்தின் பணிகளாகும்.

மாநிலத்தில் அதிக பெண்கள் பணியிடத்தில் நுழைந்து ஆட்சி, நிர்வாகத்தில் பெரிய பங்கு வகிப்பதை உறுதி செய்வதை நோக்கமாக கொண்டு முடிவு எடுக்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு நிதிஷ்குமார் தெரிவித்துள்ளார்.

இந்த ஆணையத்தில் ஒரு தலைவர், இரு துணைத் தலைவர்கள், 7 உறுப்பினர்கள் இடம்பெறுவார்கள். அனைவருமே 45 வயதுக்கு உட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மைக்கில் பேசினால் மன்னரா? ஆபாச பேச்சு வழக்கில் பொன்முடிக்கு ஐகோர்ட் கேள்வி





"மைக் முன் பேசும் போது மன்னர்களாக நினைத்து கொள்கிறார்கள். அரசியல்வாதிகள் பொது இடங்களில் பேசும் போது யோசித்து பேச வேண்டும்" என ஆபாச பேச்சு தொடர்பாக பொன்முடி வழக்கில், சென்னை ஐகோர்ட் நீதிபதி கருத்து தெரிவித்துள்ளார்.

சென்னையில் அன்பகத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் பங்கேற்ற, தி.மு.க.,வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் பொன்முடி, சைவம், வைணவ சமயங்களை இழிவுபடுத்தும் வகையில் பேசினார். அவரது பேச்சுக்கு பலரும் கண்டனம் தெரிவித்தனர். இதையடுத்து, தி.மு.க., துணை பொதுச்செயலர் பதவியில் இருந்து, பொன்முடி நீக்கப்பட்டார்.

தொடர்ந்து, அமைச்சர் பதவியும் பறிபோனது. ஆபாச பேச்சு தொடர்பாக, சென்னை ஐகோர்ட் தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்தது. இந்த வழக்கு, நீதிபதி பி.வேல்முருகன் முன், இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, நீதிபதி கூறியதாவது:

மைக் முன் பேசும் போது மன்னர்களாக நினைத்து கொள்கிறார்கள்.

அரசியல்வாதிகள் பொது இடங்களில் பேசும் போது யோசித்து பேச வேண்டும்.

அரசியல்வாதிகளின் சர்ச்சை பேச்சுகளை நீதிமன்றம் வேடிக்கை பார்த்து கொண்டு இருக்காது. இவ்வாறு சென்னை ஐகோர்ட் நீதிபதி தெரிவித்தார்.

இதையடுத்து வழக்கு விசாரணையை ஆகஸ்ட் 1ம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டார். (ஐ)

## பழம்பெரும் தெலுங்கு சினிமா பாடலாசிரியர் சிவசக்தி தத்தா மறைவு



டோலிவுட்டின் பழம்பெரும் பாடலாசிரியர் சிவசக்தி தத்தா. இவர் பிரபல இசைமையப்பாளரும், ஆஸ்கர் வென்றவருமான கீரவாணியின் தந்தை. சிவசக்தி தத்தாவின் மூத்த சகோதரர் பெயர் எழுத்தாளர் விஜேயந்திர பிரசாத். இவர் பிரபல இயக்குநர் எஸ்.எஸ். ராஜமவுலியின் தந்தை ஆவார். ராஜமவுலி இயக்கிய பாகுபலி படத்துக்கு இசையமைத்தவர் கீரவாணி.

வயோதிகம் காரணமாக சிவசக்தி தத்தா இன்று காலமானார். அவரின் மறைவை அறிந்த டோலிவுட் உலகம், ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளது. மெகா ஸ்டார் நடிகர் சிரஞ்சீவி தமது இரங்கலை வெளியிட்டு உள்ளார்.

மறைந்த சிவசக்தி தத்தா பாடலாசிரியராக மட்டுமல்லாமல் திரைக்கதை எழுத்தாளராகவும் இருந்தவர். தெலுங்கு சினிமா உலகில் இயக்குநராகவும், தயாரிப்பாளராகவும் இருந்திருக்கிறார். சிவசக்தி தத்தாவின் இறுதிச்சடங்கு எப்போது நடைபெறும் என்ற விவரங்கள் அறிவிக்கப்படவில்லை. (ஐ)





# கல்யாணச் சந்தையிலே!

**-அஞ்சனா**



திருப்பூரைச் சேர்ந்த ரிதன்யா எனும் பெண்திருமணமாகிமூன்றுமாதங்களுக்குள் குடும்ப வன்முறை காரணமாக உடல், மன ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார். இனி வாழ விருப்பம் இல்லை என முடிவெடுத்து தனது குடும்பத்தாருக்கு "வட்ஸ் அப்"பில் செய்தி அனுப்பியபின், தன் உயிரை மாய்த்துள்ளார்.

திருமண உறவில் தோல்வி அடைந்தால் இனி வாழவே கூடாது உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும் என அந்தப் பெண் சிந்திக்கும் அளவிற்கு நம் சமூகத்தில் குடும்ப அமைப்பும் சமூக கட்டுமானமும் அபாயகரமாக உள்ளன. ஆகவே 'குடும்ப அமைப்பு பெண்களுக்கு பாதுகாப்புதான்' என மேலோட்டமாக பேசி விடுவதில் உள்ள ஆபத்துகளை இப்போது நாம் தெட்டத் தெளிவாக உணரக் கூடியதாக உள்ளது.

### சேவல்கள் கூவினால் விடியுமா?

திருமணமான பெண் தன் பிரச்சினைகளை வெளிப்படையாக முன்வைப்பதற்கு, ஜனநாயகரீதியான அமைப்புகளாக குடும்பங்கள் நடைமுறையில் இல்லை. பெண்ணைப் பெற்றவர்கள், பெற்றதில் இருந்து அவளை ஒருவனிடம்கையளிப்பது என்பதையே பெரும்கடமையாகக் கருதுகின்றனர். திருமணத்துக்காகவும் குழந்தை பெறுவதற்காகவும் மட்டுமே பெண்கள் படைக்கப்பட்டார்கள் என்று இன்னும் நம்பிக் கொண்டுதானே இருக்கிறீர்கள்!

ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணம் செய்து வைக்கவேண்டும் என்கிறார்கள், இப்படி பொய்கள் மேல் கட்டப்படும் உறவு வெறும் கடுதாசியாலும் தாலிக் கயிறாலும் நிலைக்கக் கூடியதா?

தனக்கு ஒவ்வாத துணை என உணரும் போது கூட, தன்னுடைய துன்பமான நிலையை பற்றி பெண்கள் சிந்தித்து செயலாற்றுவதில்லை. தன் பெற்றோர்கள் இதனால் முகம் கொடுக்க போகும் இன்னல்களை எண்ணி, திருமண உறவுகளை முறிக்கத் தயங்குகின்றனர். அது மட்டுமல்ல விவாகரத்தை நாடும் தன்னை இந்த சமுதாயம் எவ்விதமான கண்ணோட்டதுடன் பார்க்கப் போகின்றது என்ற பயமும் பெண்களை ஆட்டிப் படைக்கிறது.

இதையும் தாண்டி, அந்தப் பெண் துணிச்சலாக தன் மீதான அடக்குமுறை, ஒவ்வாமைகளுக்கு எதிராகப்பேசினால் அவ்வளவுதான். அவர் மீதான எதிர்மறை விமர்சனங்கள் ஆண்களாலும், ஏன் பிற பெண்களாலும்கூட வைக்கப்படுகிறது.

குடும்ப எல்லைக்கு வெளியே தன் பிரச்சினைகளைப் பெண் பேசக்கூடாது என்பது எழுதப்படாத விதியாக உள்ளது. திருமண உறவோ, டளைபை வழபநவாநச உறவோ எவ்வகையான உறவு முறையாக இருப்பினும், எவரேனும் 'மன உளைச்சல் வந்தாலும், தனிப்பட்ட பிரச்சினைகள் ரகசியம் பேணப்பட வேண்டும்' என அறிவுறுத்தப்படுமாயின், அங்கே ஆபத்து என எச்சரிக்கையடைய வேண்டும்.

விவாகரத்து என்ற முடிவை எடுப்பதற்கு முழு சுதந்திரம் பெண்களுக்கு இன்றும் தமிழ் சமூகத்தில் உண்டா ? 'ஆரம்பத்தில் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும், போகப் போக சரியாகி விடும்', 'அனுசரித்துப் போ' என்பது தாரக மந்திரமாகப் பெண்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

'குடும்பம் என்றால் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும். நாங்கள் எல்லாம் எத்தனை பேச்சுகளையும் அடிகளையும் வாங்கிக் கொண்டு குடும்பம் நடத்தினோம்' -இது மிகவும் மோசமான குடும்ப வன்முறைகளை இயல்பாக்கம் செய்யும் ஆபத்தான புத்திமதிகளாக பெண்களிடம் சொல்லப்படுகிறது.

'உன்னிடம் பொறுமையும் தாங்குதிறனும் இல்லை, இதுக்கெல்லாமா விவாகரத்து பண்ணுவது?' போன்ற அதட்டல்கள். தலைவலியும் காய்ச்சலும் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக வருகிறதா? அவரவருக்கு அவர் வலி. அதை அளவிட நாம் யார் ? 'குழந்தைகள் பிறந்தால் எல்லாம் சரியாகி விடும்' என்று இன்றும் சொல்கிறார்கள். பல குடும்பங்களில் குழந்தைப்பேறின்போதும் அதன் பின்னரும்தான் குடும்ப வன்முறைகளே அதிகரிக்கின்றன. பெண்களை துன்பகரமான திருமண உறவில் தொடர்ந்து தக்க வைப்பதற்கான ஒரு உத்தி தான் இது. குழந்தைகள் இருந்தால், 'அவர்களின் எதிர்காலம் பற்றி யோசித்து பார், அப்பா இல்லாமல் குழந்தை வளரலாமா?', 'இது சுயநலம்' இம்மாதிரியான பேச்சுக்களால் மனமுடந்து மீளாத பெண்கள் உண்டு. குடும்ப வன்முறைகளை தினமும் கண்டு வளரும் பிள்ளை, அதே விஷயங்களை பெரியவனானதும் செய்யும். இப்படித்தான் தலைமுறை தலைமுறையாக குடும்ப வன்முறை கடத்தப்படுகிறது.

'அதிகம் படித்து விட்டோம் என்கிற திமிரில் பேசுகிறாய்', 'பணம் சம்பாதிக்கிறோம் என்ற இறுமாப்பு' என்று பெண்களின் சுயாதீன திறமைகளை 'குறைபாடுகளாக' சித்தரிக்கும் பெற்றோரும் உறவினரும் நம்மிடையே உண்டு. தம் பேச்சை கேட்காவிட்டால் எவ்விதமான பண உதவிகளையோ, இதர வசதிகளையோ செய்யாத குடும்பங்களையும் கண்டுள்ளேன்.

விவகாரத்து வாங்கிய பெண்களை, இரண்டாம் தர பாவனைப் பொருள்கள் போல் நோக்குகின்ற கேவலமான பொதுப் புத்தி நம் சமூகத்தில் உண்டு. படித்த பண்டிதர், பாமரர் என்ற பாகுபாடே இல்லாமல் மறுமணம் புரிவோருக்கு தாம் 'வாழ்க்கை வழங்குவதாகவும்' அதனால் அப் பெண்கள் வாழ்நாள் முழுவதும் தமக்கு நன்றியுணர்வு உடையவர்களாக இருக்க வேண்டும் என்ற மனநிலையோடு பல ஆண்கள் உள்ளனர்.

மேற் கூறிய பலவகையான சிக்கல்தன்மையான சமூக பிரச்சினைகளால் பெண்கள் விவாகரத்தை நாடுவது என்பது மிகவும் கடினமாக விடயமாக விடுகிறது.

இக்கட்டுரையின் நோக்கம் இச்சூழ்நிலைகளில் தற்கொலை நியாயப்படுத்துவது அல்ல. மாறாக பெண்களை தற்கொலை முடிவுக்கு கொண்டு செல்லும் கொடூரமான கல்யாணங்கள் நிலைத்து நிற்க வேண்டும் என வலியுறுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும். திருமண முறிவோடு தனித்து வாழும் சூழலை அப் பெற்றோரும் சுற்றத்தாரும் ஏற்படுத்தி இருந்தால் இந்தத் தற்கொலை நிகழ்ந்திருக்குமா? விவாகரத்து செய்வதால் என்ன குடிமுழுகி விட போய் விடுகிறது?கலாசார சீர்கேடு என்ற முழங்குபவர்கள், அந்த 'கலாசாரம்' என்றால் என்ன என்று முறையான விளக்கம் பெரும்பாலும் சொல்லத் தெரியாதவர்களாக இருக்கிறார்கள்.

கலாசார முகமூடியோடுதான் பெண்ணடிமைத்தனமும் பாலின பேதங்களும் தொடர்ந்து கடைப்பிடிக்கப் படுகின்றன என்ற உண்மையை ஒப்புக் கொள்ள விரும்பாத கள்ளத்தனத்தை என்ன சொல்வது? ஆணாதிக்கம் என்பது கலாசாரம் என்ற பெயரில் பெண்கள் தாங்கும் ஒன்றாக இன்னும் உள்ளது. சேவல்கள் கூவித்தான் விடிகிறது என்று இன்றும் நம்புகிறார்களா?

### தங்கமுட்டை இடும் கோழிகளா பெண்கள்

திருமணத்தின் போது சீதனமாக ரிதன்யா வீட்டில் 500 பவுன் நகை தருவதாகக் கூறி, 300 பவுன் நகை போட்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. மேலும் ரூ.70 லட்சம் மதிப்பிலான கார் மற்றும் ரூ.2.5 கோடி செலவு செய்து மிகவும் ஆடம்பரமாக திருமணம் செய்து வைத்துள்ளனர். ஆனால் இவ்வளவு செலவு செய்து, ஆடம்பரமாகத் திருமணம் செய்து வைத்தும் ரிதன்யா சந்தோஷமாக வாழவில்லை. ரிதன்யாவிடம் மாமனார், மாமியார் ஆகிய இருவரும் மீதமுள்ள 200 பவுன் நகை இன்னும் தரவில்லை என்று கூறி துன்புறுத்தியதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

தங்கமும் பெண்ணடிமைத்தனமும் பொதுவாக பொருத்திப் பேசப்படும் விஷயங்கள் அல்ல. ஆனாலும் தங்கத்தின் மீதான ஆசை மற்றும் அதன் மூலம் கிடைக்கும் அந்தஸ்து, பெண்களை பொருளாதார ரீதியாக குடும்பத்தின் கட்டுப்பாட்டில்வைத்திருப்பதற்குக்காரணமாக அமைகிறது. தங்கம் பெரும்பாலும் பெண்களின்திருமணத்தின்போது சீதனமாக அல்லது பரிசாக வழங்கப்படுகிறது. இது பெண்ணின் அந்தஸ்தை குறிப்பதாகவும், அவளது குடும்பத்தின் கௌரவத்தை வெளிப்படுத்துவதாகவும் கருதப்படுகிறது. தங்கம் வீடுகளில் ஒரு பெரும் முதலீட்டாக பார்க்கப்படுகிறது.

டிரம்பின் அமெரிக்க வர்த்தகக் கொள்கை மாற்றங்களால் தங்கத்தின் விலை உயர்ந்த வண்ணம் உள்ளது. அண்மைக்காலமாக தங்கத்தின் விலை ஏற்ற இறக்கங்கள் பெரும் பேசு பொருளாகியுள்ளது. 2030 ஆண்டளவில் ஒரு கிராம் தங்கத்தின் விலை 23,000 ரூபாயை எட்டும் என சர்வதேச வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். இந்திய நாட்டுப் பெண்களிடம் ஒட்டுமொத்தமாக ஏறக்குறைய 24,000 டன் தங்கம் உள்ளது. இது உலக ஆபரணத் தங்கத்தில் 11 விழுக்காடு என்று உலக தங்க மன்றம் (World Gold Council) அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவித்துள்ளது.

அதிக தங்க சேமிப்பைக் கொண்டிருக்கும் உலகின் முதல் ஐந்து நாடுகளின் ஒட்டுமொத்த தங்க சேமிப்பைவிட, இந்திய நாட்டுப் பெண்களிடம் உள்ள தங்கத்தின் அளவு அதிகம். இந்தியாவின் மொத்த தங்கத்தில் தென்னிந்தியா 40 விழுக்காட்டை வைத்திருக்கிறது. தமிழ் நாடு மட்டும் 28 விழுக்காட்டை கொண்டிருக்கிறது. இது இந்தியப் பொருளியலில் முக்கியப் பங்கு வகிக்கிறது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 40% வரை கொண்டிருக்கிறது.

திருமணத்தின்போது கொடுக்கப்படும் சீதனம், பெண்ணின் குடும்பத்தினரால் அவரது கணவன் வீட்டாரிடம் ஒப்படைக்கப்படுகிறது. சில சமயங்களில் அந்த தங்கம் பெண்ணின் விருப்பமின்றி பயன்படுத்தப்படுவதோடு, பெண்ணின் பொருளாதார நிலை, தங்கத்தை வைத்திருப்பதன் மூலம் நிர்ணயிக்கப்படுகிறது. அவளின் கணவனோ அல்லது குடும்பத்தினரோ, தங்கத்தை வைத்து அவளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும் அல்லது அவள் மீது அதிகாரம் செலுத்தவும் முடிகிறது. இப்படிப்பட்ட சூழலில், தங்கம் ஒரு பெண்ணின் அடிமைத்தனத்திற்குக் காரணமாக அமைகிறது.

பெண், மண், பொன் இவையெல்லாம் 'புனிதமான' உடைமைகளாகவே நம் சமூகத்தில் பார்க்கப்படுகின்றன. 'லட்சுமி கடாட்சமாக' போற்றப்படுகின்றன. மார்க்ஸ், தங்கம் மற்றும் பணம் குறித்து தனது மூலதனம் (னுயள முயிவையட) புத்தகத்தில் விரிவாக எழுதியுள்ளார். இதில், தங்கம் ஒரு பண்டமாக எப்படி முதலாளித்துவ சமூகத்தில் முக்கியத்துவம் பெறுகிறது என்பதை விளக்குகிறார். மார்க்ஸ், முதலாளித்துவத்தில் தங்கம் ஒரு பண்டமாக எப்படி சுரண்டலுக்கு வழிவகுக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டுகிறார். பெண் ஏன் அடிமையானாள் என்கிற பெரியாரின் நூலில், 'பெண், நகை மாட்டப்படும் நிலையாக உபயோகிக்கப் படுகிறாள்' என்று சுட்டிக் காட்டுகிறார்.

எனவே, தங்கம் ஒரு பெண்ணுக்கு அவசர பணத்தேவைக்காக உதவினாலும், அவளது குடும்ப பொருளாதார நிலையை மேம்படுத்தவும் உதவும் ஒரு பொருளாக இருந்தாலும், சில சமூகங்களில் அது அவளது சுதந்திரத்தைப் பறித்து, அடிமைத்தனத்திற்கு வழிவகுக்கும் ஒரு கருவியாகவும் உள்ளது.



# அமெரிக்கா டெக்ஸாசில் மழை வெள்ளம் பலி எண்ணிக்கை 104 ஆக அதிகரிப்பு

டெக்சாஸ் கனமழை, வெள்ளத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 82 ஆக உயர்வு: பேரிடராக அறிவித்த டிரம்ப்

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள கெர்கவுண்டியில் பெய்த கனமழையால் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. இதனால் குவாடலூப் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் உயிரிழப்புகள் அதிகரித்து வருகிறது. இன்னமும் பலரை காணவில்லை. அவர்களை தேடும் பணி நடந்து வருகிறது.

கனமழை காரணமாக, இதுவரை 104 பேர் உயிரிழந்துள்ளனர். கெர் கவுன்டியின் சராசரி ஆண்டு மழைப்பொழிவில் மூன்றில் ஒரு பங்கு மழை அதாவது, 30 செ.மீ., மழை ஒரே இரவில் பெய்துள்ளதே நிலைமை மோசமாக காரணம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிரிழப்பு எதிரொலியாக இதை பேரிடராக அந்நாட்டு அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார். இதுதொடர்பான கோப்பில் அவர் கையெழுத்திட்டுள்ளார். குவாடலூப் நதியில் 45 நிமிடங்களில் 26 அடி அளவுக்கு நீர்மட்டம் உயர்ந்து, கரையில் இருந்த குடியிருப்புகளை வெள்ளம் சூழ்ந்தது. இதனால் நிலைமை மோசமானது. (ஐ)

# கென்யாவில் அரசுக்கு எதிராக வெடித்தது கிளர்ச்சி : 11 பேர் சுட்டுக் கொலை




கென்யாவில் அரசுக்குஎதிரான போராட்டத்தின் போது 11 பேர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தால் அங்கு பதற்றம் நீடிக்கிறது.

கென்யாவில் 1990ம் ஆண்டு அப்போது சர்வாதிகாரியாக இருந்த அதிபர் டேனியல் அரப் மொய்க்கு எதிராக மக்கள் போராட்டத்தில் குதித்தனர். அதே ஆண்டு ஜூலை 7ம் தேதி நிகழ்ந்த போராட்டத்தில் டேனியல் அரப் மொய் ஆட்சி முடிவுக்கு வந்தது.

35 ஆண்டுகள் நிறைவு அடைந்த அப்போராட்டத்தை நினைவு படுத்தும் வகையில் நேற்று கென்ய தலைநகர் நைரோபியில் மக்கள் போராட்டத்தில் இறங்கினர். அந்நாட்டின் தற்போதைய அதிபர் வில்லியல் ரூடோ பதவி விலகுமாறு அவர்கள் முழக்கமிட்டனர்.

பேரணியாக சென்ற போராட்டக்காரர்களை அங்கு பாதுகாப்புக்கு நின்றிருந்த போலீசார் முன்னேறவிடாமல் தடுத்தனர். அப்போது இரு தரப்புக்கும் இடையே மோதல் மூண்டது. ஒரு கட்டத்தில் போலீசாரை போராட்டக்காரர்கள் தாக்க ஆரம்பித்தனர்.

இதையடுத்து கூட்டத்தை கலைக்க கண்ணீர் புகை குண்டுகளை வீசிய போலீசார், பின்னர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 11 பேர் உயிரிழந்தனர். ஏராளமானோர் படுகாயம் அடைந்தனர். இந்த சம்பவத்தை அடுத்து கென்யாவில் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந் நிலையில் உள்துறை அமைச்சர் கிப்சும்பா முர்கோமென் கூறி இருப்பதாவது பாதுகாப்பு படையினர் முழு வீச்சில் உஷாராக இருக்கிறோம். ஊர்வலங்களில் ஊடுருவி, மக்களை குழப்பத்தில் வைத்திருக்கவும் சொத்துகளை அழிக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்களையும் கையாள தயாராக உள்ளோம். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

மக்கள் போராட்டம் வெடித்துள்ள நிலையில் கென்யாவில் அமைதியற்ற சூழல் காணப்படுகிறது. அங்குள்ள பெரும்பாலான கல்வி நிலையங்கள், அலுவலகங்கள், வணிக வளாகங்கள் மூடப்பட்டு உள்ளன. தொடர்ந்து பதற்றம் அதிகரித்து வருவதால், அங்கு பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டு உள்ளன. (ஐ)

# அமைதிக்கான நோபல் பரிசுக்கு அதிபர் டிரம்ப் பெயரை பரிந்துரை செய்தார் இஸ்ரேல் பிரதமர்



அமைதி மற்றும் பாதுகாப்பிற்காக டிரம்பின் முயற்சியை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பாராட்டியுள்ளார். அவர், டிரம்புக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க வேண்டும் என பரிந்துரைத்து உள்ளார்.

அமைதிக்கான நோபல் பரிசு பெறுவதற்கான தகுதி, வேறு எவரை காட்டிலும் தனக்கே இருப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் நம்புகிறார். சமீபத்தில் அவர் நான் என்ன செய்தாலும் எனக்கு நோபல் பரிசு கிடைக்காது என அதிருப்தி தெரிவித்திருந்தார். டிரம்புக்கு அமைதிக்கான நோபல் பரிசை வழங்க வேண்டும் என்று, நோபல் கமிட்டிக்கு பாகிஸ்தான் அரசாங்கம் சிபாரிசு செய்து இருந்தது.

இந்த நிலையில், உலக அமைதி மற்றும் பாதுகாப்பிற்காக டிரம்பின் முயற்சியை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பாராட்டியுள்ளார். அவர், டிரம்புக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க வேண்டும் என பரிந்துரைத்து உள்ளார். வெள்ளை மாளிகையில் நடந்த சந்திப்பின் போது டிரம்பிற்கு ஒரு நியமனக் கடிதத்தை வழங்கினார்.

'நோபல் பரிசுக் குழுவிற்கு நான் அனுப்பிய கடிதத்தை உங்களிடம் சமர்ப்பிக்க விரும்புகிறேன். அமைதிப் பரிசுக்கு உங்களை பரிந்துரைப்பது மிகவும் தகுதியானது. அதிபர் டிரம்ப் அதைப் பெற வேண்டும்' என்று நெதன்யாகு கூறினார். குறிப்பாக மத்திய கிழக்கில், நிலவும் பதட்டமான சூழ்நிலைக்கு மத்தியில் டிரம்பின் தலைமையை இஸ்ரேல் பிரதமர் பாராட்டி உள்ளார். (ஐ)

# அமெரிக்காவில் விபத்து: தெலுங்கானாவை சேர்ந்த 4 பேர் பலி!



அமெரிக்காவிற்கு சுற்றுலா சென்ற ஹைதராபாத் குடும்பத்தினர் 4 பேர் வாகன விபத்தில் உயிரிழந்தனர்.

தெலுங்கானா மாநிலம், ஹைதராபாத்தை பூர்வீகமாக கொண்ட ஒரே குடும்பத்தினர் 4 பேர் விடுமுறை தினத்தை கழிக்க அமெரிக்கா சென்று உள்ளனர். அட்லாண்டாவில் உள்ள தங்கள் உறவினர்களைப் பார்த்துவிட்டு 4 பேர் திரும்பிக் கொண்டிருந்தபோது, அவர்களது கார் விபத்தில் சிக்கியது. நான்கு பேரும் சென்ற கார் லாரி மீது மோதி தீ பற்றியதில் உடல் கருகி உயிரிழந்தனர்.

தேஜஸ்வினி, ஸ்ரீ வெங்கட் மற்றும் அவர்களது இரண்டு குழந்தைகள் என மொத்தம் நான்கு பேர் உடல்கள் இறுதிச் சடங்குகளுக்காக ஹைதராபாத்திற்கு கொண்டு வரப்படும் என இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

மற்றொரு விபத்து

நியூயார்க்கில் நடந்த ஒரு பயங்கரமான சாலை விபத்தில் கிளீவ்லேண்ட் மாநில பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரண்டு இந்திய மாணவர்கள் இறந்ததாக இந்திய துணைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அந்த மாணவர்கள் 20 வயது மானவ் படேல் மற்றும் 23 வயது சவுரவ் பிரபாகர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். 'இரண்டு இந்திய மாணவர்களான மானவ் படேல் மற்றும் சவுரவ் பிரபாகர் ஆகியோர் உயிரிழந்த சம்பவத்தை அறிந்து மிகுந்த வருத்தம் அடைந்தோம்' என இந்திய தூதரகம் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளது. (ஐ)

## ரம்புட்டான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மித்தெனிய பொலிஸ் பிரிவின் ஜூலம்பிட்டிய பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

சிறுவன் ரம்புட்டான் பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது திடீரெனச் சுகயீனமுற்றுள்ளார்.

இதனை அவதானித்த பெற்றோர் சிறுவனை உடனடியாகக் கட்டுவான வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

பின்னர் இந்தச் சிறுவன் மேலதிக சிகிச்சைக்காக வலஸ்முல்ல ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதையடுத்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான்.

ரம்புட்டான் விதை தொண்டையில் சிக்கி மேற்படி சிறுவன் உயிரிழந்துள்ளான் என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மித்தெனிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஓமந்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்து அதைச் சுற்றி வேலி அமைக்க முற்பட்ட வேளை அங்கு கூடிய அரசியல்வாதிகள், பொதுமக்களால் நிறுத்தப்பட்டதோடு விகாரை அமைக்கும் முயற்சியும் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் காணி தொடர்பில் கடந்த பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில் அதைப் பொலிஸார் அபகரிக்கும் செயற்பாட்டை நிறுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஓமந்தைப் பொலிஸாருக்கு அந்த அரச காணியில் எவ்விதமான அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டாம் எனப் பிரதேச செயலாளரால் எழுத்து மூலமான கடிதமும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

எனினும், பொலிஸார் அந்தக் காணியைச் சுத்தம் செய்து அதனைச் சுற்றி வேலி அமைக்கும் பணியில் இன்று ஈடுபட்டிருந்தனர். இதையடுத்து அங்கு கூடிய வவுனியா மாநகர சபையின் மேயர் சு.காண்டீபன், வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் தவிசாளர் பி. பாலேந்திரன், வவுனியா வடக்கு பிரதேச சபையின் உப தவிசாளர் எஸ்.சஞ்சுதன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ். தவபாலன் உட்பட் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் செ. மயூரன், மாநகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு எதிர்ப்புத் தெரிவித்ததோடு குறித்த காணிக்குள் பிரவேசித்து அங்கிருந்த பொலிஸாரையும் அகற்றினர்.

இதையடுத்து பொலிஸ்நிலையத்துக்குச்சென்று பொலிஸ் பொறுப்பதிகாரியுடனும் அவர்கள் கலந்துரையாடினர்.

இதன்போது பொலிஸ் பொறுப்பதிகாரி குறித்த காணியில் விகாரை அமைக்கும் திட்டம் இல்லை எனவும், தமது கட்டுப்பாட்டில் 2009 ஆம் ஆண்டில் இருந்து அந்தக் காணி காணப்படுகின்றது எனவும், அதைத் தமது மைதான தேவைக்காகவே புனரமைப்பதாகவும், எவ்விதமான கட்டடங்களும் கட்டப்படாது எனவும் தெரிவித்ததை அடுத்து அங்கு கூடியிருந்தவர்கள் கலைந்து சென்றனர்.

எனினும், அந்தக் காணியைப் பொலிஸார் அபகரிப்பதற்கு விட முடியாது எனவும், அவ்வாறு அபகரிக்கும் பட்சத்தில் தொடர்ந்தும் தமது போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் அங்கு குழுமியிருந்தவர்கள் தெரிவித்தனர்.

எனினும், காணிக்கு வேலி இடும் பணிகள் தொடர்ந்தும் தற்போதும் நடைபெற்று வருகின்றன.

## தையிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“இந்தப் போராட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நாளை (ஜூலை 9 - புதன்கிழமை) மாலை 4:30 மணி முதல் 6:30 மணி வரை மற்றும் நாளைமறுதினம் (ஜூலை 10 - வியாழக்கிழமை) பௌர்ணமி தினத்தன்று காலை 6:30 மணி முதல் மாலை 6:00 மணி வரை கவனயீர்ப்புப் போராட்டமாக நடைபெறவுள்ளது.

விகாரை அகற்றப்பட்டு, காணிகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தும் நோக்கத்தோடு நடைபெறும் இந்தப் போராட்டத்தில் காணி உரிமையாளர்களும், பொதுமக்களும் இணைந்து பங்கேற்கவுள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் அனைத்து சமூகப் பிரதிநிதிகளும், குடிமக்களும் திரளாக பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.” - என்றுள்ளது.

## ரயிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று அதிகாலை 1.30 மணிக்கு மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலில் மோதுண்டு கறுவப்பங்கேணி, அரோஸ் வீதியை சேர்ந்த எஸ். நிசாந்தன் என்னும் 23 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

ரயில் கடவையில் இருந்து தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்தவரே இவ்வாறு ரயிலில் மோதுண்டுள்ளார் என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம், மோதிய ரயிலில் கொண்டு செல்லப்பட்டு ஏறாவூர் ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

“எமது மக்களின் இருப்பதை தக்கவைத்துக் கொள்வதற்காக நில அபகரிப்புக்கு எதிரான போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முப்படைகளிலும் பல்வேறு வழிகளில் நில அபகரிப்பில் ஈடுபடுகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொதுக் காணிகளில் உள்ள மரக் கிளையை தமிழர் ஒருவர் வெட்டினால் அவர் கைது செய்யப்பட்டு, அவர் சிறைக்குச் செல்ல நேரிடும். ஆனால், வடக்கில் மகாவலி வலயத்துக்குட்பட்ட 600 ஏக்கர் காணியைப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் சட்டவிரோதமான முறையில் வெற்றிடமாக்கியுள்ளார். வவுனியா, ஓமந்தை பொலிஸ் நிலையத்துக்கு முன்னாள் உள்ள காணி ஒன்றைப் பொலிஸார் துப்பரவு செய்துள்ளனர். காணி அபகரிப்பு நிறுத்தப்படும், காணி விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிடுகின்றார். ஆனால் பொலிஸார், முப்படையினர் காணி அபகரிப்பு நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுகின்றார்கள்.” - என்றார்.

இதன்போது எழுந்து கருத்துரைத்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால,

‘ஓமந்தை பொலிஸ் நிலையம் தொடர்பில் இன்று காலையில் அறிந்தேன். இந்த விடயம் தொடர்பில் பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்தேன். அந்தக் காணி துப்பரவு செய்தல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.” - என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.,

“மிக்க நன்றி. அரசு ஒரு கொள்கையில் செயற்பட்டாலும், வடக்கு மற்றும் கிழக்கில் முப்படையினரும், பொலிஸாரும் பிறிதொரு கொள்கையில் செயற்படுகின்றார்கள். இவ்வாறான மாறுபட்ட கொள்கையினால் அரசின் மீதான மக்களின் நம்பிக்கை சிதைவடையும் என்பதைக் குறிப்பிட்டுக்கொள்கின்றேன்.

மகாவலி வலயத்துக்குட்பட்ட காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர்தான் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.” - என்றார்.

இதன்போது எழுந்து கருத்துரைத்த சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க,

“600 ஏக்கர் அல்ல 46 ஏக்கர். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவர்தான் மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணியை அழித்துள்ளார். மகாவலி அபிவிருத்தி அதிகார சபை அந்த நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளது. அந்த வழக்கு இன்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஆகவே, இந்தச் சம்பவத்துக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.” - என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய செல்வம் அடைக்கலநாதன்,

“மன்னார் மாவட்டத்தில் பல்வேறு வழிகளில் மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. அண்மையில் மன்னாரில் பொதுக் காணிகள் துளையிட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும்.” - என்றார்.

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடையாளப்படுத்த முடியும். ஆனால், எழுபது ஆண்டு காலமாகத் தமிழர்கள் மீது புரியப்பட்ட இனப்படுகொலைக்கான நீதி விசாரணையை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியோடு நிறுத்திக்கொள்ள இந்த அரசும் தன்னாலான பிரயத்தனங்களை முன்னெடுக்கக்கூடும் என்ற அடிப்படையில், இன அழிப்புக்கான பொறுப்புக்கூறலும் பரிகார நீதியும் பரந்துபட்ட அளவில் அணுகப்பட வேண்டும் என்பதில் நாமும், நீதியை நாடும் எல்லாத் தரப்புகளும் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டும்.

உலகின் மனச்சாட்சியை உலுக்கும் உணர்வு சார்ந்த படுகொலை அடையாளமான செம்மணி மனிதப் புதைகுழியோடு, மன்னார், கொக்குத்தொடுவாய், திருக்கேதீஸ்வரம், மண்டைதீவு உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பிலும் முறையான நீதி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அதனடிப்படையில் 2009 ஆம் ஆண்டு போர் மௌனிக்கப்பட்ட போது, ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் காணாமல் ஆக்கப்பட்டும், கொகல்லப்பட்டும் உள்ளதாக அப்போதைய மன்னார் மறைமாவட்ட ஆயர் மறைந்த இராஜப்பு ஜோசப் வழங்கிய சாட்சியத்தின் அடிப்படையில் சர்வதேச விசாரணைகளுக்கான அடிப்படையாக செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் அணுகப்பட வேண்டும்.” - என்றார்.

## கைத்துப்பாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மைல்கல் பிரதேசத்தில் வைத்து நேற்று திங்கட்கிழமை இரவு மேற்படி நபர் நீர்கொழும்பு பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜா - எல பகுதியை சேர்ந்த 47 வயதுடைய நபரே கைதானவர் ஆவார்.

அவரிடமிருந்து கைத்துப்பாக்கி, 4 தோட்டாக்கள் மற்றும் 9 கிராம் 715 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஈஸ்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நன்றாக விளக்கி விடயங்களை முன்வைக்கக்கூடிய ஒரு வேத விற்பன்னர். சமூகத்தை எழுச்சியூட்டும் வலுவான ஆளுமை கொண்ட ஒரு பேச்சாளர் போன்ற பாத்திரங்களுக்கு அப்பால் உண்மையான மனித நேயர்.

நாம் சாதாரணமாக ஆபத்தான நிலையில் இருக்கும் போது பதற்றமடைவோம். ஆனால், கர்தினால் ஆபத்தான நிலையில் பதற்றமடைவதில்லை. விசேடமாக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் போது முழு சமூகத்தையும் ஆற்றுப்படுத்தியது இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். கர்தினால் அந்தச் சந்தர்ப்பத்தை முறையாக அணுகினார். கர்தினாலின் ஆற்றுப்படுத்தும் குணத்தில் இருந்து பயனைப் பெற்றுக்கொள்வதை இந்தச் சமூகம் தவறவிட்டுள்ளது. அதனால் இந்தச் சமூகம் அவருக்குக் கடமைப்பட்டுள்ளது.

நாம் சந்திக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் கர்தினால் எவ்வளவு மனவேதனையுடன் இருக்கிறார் என்பதை நான் அறிவேன். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அவரது மனதில் கலந்துள்ளது.

சந்திக்கும் அனைத்து சந்தரப்பங்களிலும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் விடயங்களை விசாரிப்பார். அது சில சந்தர்ப்பங்களில் அமைதியான தொனியில் இருக்கும். சில சந்தர்ப்பங்களில் குழப்பத்துடன் இருக்கும். இன்னுமொரு சந்தர்ப்பத்தில் அழுத்தம் விடுக்கும் வகையில் இருக்கும். ஆனால், அவருக்குத் தனிப்பட்ட எந்தத் தேவையும் இல்லை என்பதை நாம் அறிவோம்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதுலின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய எண்ணமே எமக்குள்ளது. அது தொடர்பான விசாரணைகளைக் கால ஓட்டத்தில் மூடிமறைக்க இடமளிக்காது நீதியைப் பெற்றுக்கொடுக்கத் தேவையான அனைத்து முயற்சிகளையும் நான் எடுப்பேன் என்பதை கர்தினால் முன்னிலையில் உறுதியாக க் கூறிக்கொள்கின்றேன். அது இலகுவான விடயமல்ல. சில சந்தர்ப்பங்களில் அரசு அரச அதிகாளிடமே விசாரணைகளை மேற்கொள்கின்றது. தற்போது அரசே அரச அதிகாரிகளிடம் விசாரணை முன்னெடுக்கும் பலவீனமான நிலையை எதிர்நோக்கியுள்ளது. இதுவே எமது நெருக்கடி நிலைமை. எனினும் நிச்சயம் நீதி வழங்கப்பட வேண்டும். நாம் அதனைச் செய்வோம்.” - என்றார். இந்த நிகழ்வில் மல்வத்து தரப்பின் அநுநாயக்க வண. நியங்கொட விஜிதசிறி தேரர் மற்றும் கலாநிதி வண, ஓமல்பே சோபித நாயக்க தேரர் ஆகியோர் கர்தினாலுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர். மகா சங்கத்தினர், சர்வமதத் தலைவர்கள், இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் தலைவர் ஹெரல்ட் அந்தோணி பெரேரா, இலங்கைக்கான வத்திக்கான் அப்போஸ்தலிக்க பிரதிநிதி மொன்சிக்னோர் ரொபர்டோ லுகினி, கொழும்பு உயர் மறை மாவட்ட துணை ஆயர்களான மெக்ஸ்வெல் சில்வா, அந்தோனி ஜயக்கொடி உள்ளிட்ட கத்தோலிக்க அருட்தந்தைகள், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அமைச்சர்கள், முப்படைத் தளபதிகள், பதில் பொலிஸ்மா அதிபர், வெளிநாட்டுத் தூதுவர்கள் உட்படப் பல பிரமுகர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.07.2025 வெளியிடப்பெற்றது.